# பாதுகாப்பு இல்லத்திற்கான கொள்கை ஆவணம்

## 1. முன்னுரை

1938 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க சிறுவர் மற்றும் இளைஞர் கட்டளைச் சட்டத்திற்கு அமைய பாதிக்கப்பட்ட சிறுவர் மற்றும் குற்றமிழைத்த அல்லது குற்றமிழைத்தவர் என சந்தேகிக்கப்படும் சிறுவர் ஒருவரை பாதுகாக்க, பாதுகாப்பு இல்லம், வைத்தியசாலை மற்றும் அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் இடம் என்பன பாதுகாப்பான இடங்களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

இவ் பாதுகாப்பான இடங்களில் அவ்வாறான சிறுவர் அல்லது இளம்பராயத்தவர் பிணையுடன் பெற்றோர் உறவினருடன் அனுப்ப முடியாதபோது பொருத்தமான நீதவான் நீதிமன்றிக்கு முற்படுத்தும் வரை உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு குறையாத பதவியுடைய பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது பொருத்தமான நீதவான் நீதிமன்றத்தின் கட்டளையுடன் 28 நாட்களிற்கு மேற்படாத காலத்திற்கு தடுத்துவைக்கலாம்.

அத்துடன் 1998 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க திருத்திய குற்றவியல் நடவடிக்கை கோவைகள் சட்டத்தின் பிரிவு 451 இல் மேல் நீதிமன்றத்தினால் அல்லது பொருத்தமான நீதவான் நீதிமன்றத்தினால் பாதிக்கப்பட்ட 18 வயதிற்குட்பட்ட சிறுமி தொடர்பாக பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு நோக்கம் கருதி நீதிமன்ற வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது பாதுகாப்பு இல்லங்களில் தங்க வைக்கலாம்.

மேற்குறித்த தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கிலேயே "சிறுமிகளின் உச்சநலனைக்" கருத்தில் கொண்டு வடமாகாணத்தில் இவ் பாதுகாப்பு இல்லங்கள் அமைக்கப்படுகின்றன.

## 2. தூரநோக்கு

சிறுமிகளை சமூகத்தில் சிறந்த தலைமுறையினராகக் கட்டியெழுப்புதல்.

(வன்முறையற்ற சமுதாயத்தினை உருவாக்குதல்)

## 3. பணிநோக்கு

பாதிக்கப்பட்ட, சட்டத்துடன் தொடர்புபடுகின்ற சிறுமிகளின் பாதுகாப்பிற்கும், பராமரிப்பிற்குமான பொருத்தமான இடையீடுகளை வழங்குவதன் மூலம் நாட்டின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு அவர்களின் பங்களிப்பைப் பெறுவதனூடாக மகிழ்ச்சியான சமுதாயத்தை உருவாக்குதல்.

சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

## 4. தொழிற்பாடுகள்

4.1 பாதிக்கப்பட்ட சிறுமிகளின் பாதுகாப்பு, சுயம் மற்றும் இரகசிய தன்மையினை பேணுதல்.

4.2 இல்லத்தில் தங்கியுள்ள பாதிக்கப்பட்ட சிறுமிகளின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, மற்றும் உறைவிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

4.2 மருத்துவ மற்றும் சுகாதார வசதிகளை வழங்குதல்

4.4 பாதிக்கப்பட்ட சிறுமிகள் தாமாகவே தமது பிரச்சனைகளை தீர்ப்பதற்கும், தம்மை வலுப்படுத்துவதற்கும் அவர்களின் சுயத்தினை பேணுவதற்குமான சிகிச்சைகளை வழங்குதல்.

4.5 பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்

4.6 உள ஆற்றுப்படுத்தல் வசதிகளை வழங்குதல்

4.7 ஆரோக்கியமான பொழுதுபோக்கு, ஆன்மீகம் மற்றும் மகிழ்ச்சியான சூழல் என்பவற்றை ஏற்படுத்திக் கொடுத்தல்.

4.8 பொருத்தமான தொழிற்பயிற்சிகளை வழங்குதல்

4.9 கல்வி கற்கும் வசதி மற்றும் தொழில் நுட்ப கல்வியினை வழங்குதல்

4.10 உடற்பயிற்சி, விளையாட்டு என்பவற்றுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

4.11 யோகா மற்றும் தியானப் பயிற்சிகளை வழங்குதல்

4.12 மொழித்திறனை வளர்ப்பதற்கான பயிற்சிகளை வழங்குதல்.

## 5. பாதுகாப்பு இல்ல அனுமதி முறைகள்

பாதுகாப்பு இல்லத்திற்கான அனுமதிகள் பின்வரும் முறைகளில் மேற்கொள்ளப்படலாம்.

5.1 18 வயதிற்குட்பட்ட சிறுமிகள் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளைக்கு அமைவாக இல்லத்திற்கு அனுமதிக்கப்படலாம்.

5.2 அவசிய தேவைகளின் போது சிறுமிகள் தொடர்பில் வைத்தியசாலையில் நடாத்தப்படும் விடயமாநாடு மற்றும் பிரதேச செயலகங்களில் நடாத்தப்படும் விடயமாநாடுகளில் எடுக்கப்படும் தீர்மானத்திற்கு அமைய விடயமாநாட்டு அறிக்கை மற்றும் மாகாண ஆணையாளர் அனுமதியுடன் இல்லத்திற்கு அனுமதிக்கப்படலாம்.

அனுமதிக்கப்பட்ட சிறுமிகளுக்கு பிரிவு நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தரே பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களாக இருத்தல் வேண்டும்.

சுசீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

### 6. அனுமதியின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

பாதுகாப்பு இல்லத்திற்கு அனுமதிகளை மேற்கொள்ளும் போது கீழ்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

7.1. நீதிமன்றத்தினால் வழங்கப்படும் நீதிமன்றக் கட்டளை

7.2. நன்னடத்தை உத்தியோகத்தரினால் நீதிமன்றிற்கு சமர்ப்பிக்கப்பட்ட சமூக அறிக்கையின் பிரதி (சமூக அறிக்கை ந.பி.சே 10இல் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்)

7.3. நடாத்தப்பட்ட விடயமாநாட்டின் மூலம் இணைக்கப்படும் சிறுமிகள் தொடர்பான விடயமாநாட்டு அறிக்கை

7.4. வைத்தியசாலையில் நடாத்தப்படும் விடயமாநாட்டின் மூலம் இணைக்கப்படும் சிறுமிகளாயின் வைத்தியசாலைப் பணிப்பாளரின் கையொப்பம், மருத்துவ அறிக்கையுடன் கூடிய விடயமாநாட்டு அறிக்கை.

### 7. இல்லத்திற்கு அனுமதிக்கப்படக்கூடியவர்கள்

பாதுகாப்பு இல்லத்திற்கு பாதிக்கப்பட்ட 18 வயதிற்குட்பட்ட சிறுமிகள் அனுமதிக்கப்படலாம். இங்கு பாதிக்கப்பட்ட சிறுமி என்னும் பதம் பாலியல் துஸ்பிரயோகத்திற்குள்ளானோர், பாலியல் தொந்தரவால் ஏற்பட்ட தற்கொலை முயற்சி மற்றும் இளவயதுக் கர்ப்பிணிகள் என்போரைக் குறித்து நிற்கின்றது. மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிகள் பாலியல் துஸ்பிரயோகத்திற்குள்ளான சிறுமிகள் வன்முறையால் ஏற்பட்ட முறையற்ற கர்ப்பவதிகள், குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள், வீட்டாரால் ஏற்காமல் புறக்கணிக்கப்பட்டவர்கள், வீட்டுச் சூழலால் தற்கொலை எண்ணம் கொண்டோர், மற்றும் குறுகிய கால புனர்வாழ்வு வழங்கவேண்டியவர்களான தாய், சேய் ஆகியோரை உள்ளடக்கியதாக காணப்படும்.

### 8. இல்லத்திற்கு அனுமதிக்கப்பட முடியாதவர்கள்

கீழ்வருவோர் பாதுகாப்பு இல்லத்திற்கு அனுமதிக்க தகுதியற்றவர்களாக காணப்படுவர். இல்லத்திற்கு அனுமதிக்கப்படும் போது கீழ்வரும் வகுதிக்குள் அடங்காதவர்கள் என்பதை இல்லப் பராமரிப்பாளர் உறுதிப்படுத்தவேண்டும்.

9.1 8 வயதிற்குமேற்பட்ட ஆண் பிள்ளை.

9.2 சிக்கலான மருத்துவ நிலையுடைய பாதிக்கப்பட்ட சிறுமிகள்.

9.3 மனநிலை குழப்பமடைந்த, குழப்பம் மிக்க குணநலன் மற்றும் நடத்தை கெட்ட குணமுடைய சிறுமிகள்

9.4 தொற்றுநோய்களினை கொண்டுள்ள சிறுமிகள்

சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

## 9. இல்லத்திலிருந்து தப்பியோடுதல்

இல்லத்திற்கு அனுமதிக்கப்பட்ட சிறுமிகள் இல்லத்திலிருந்து தப்பியோடுகின்ற சந்தர்ப்பத்தில் இல்லப் பொறுப்பதிகாரி அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். தப்பியோடிய சிறுமி எப்பிரிவு நன்னடத்தை உத்தியோகத்தர் மூலம் அனுமதிக்கப்பட்டாரோ அவருக்கு அறிவித்தல் வழங்குவதுடன் சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தருக்கும் மாகாண ஆணையாளருக்கும் எழுத்து மூலமான அறிக்கையினை சமர்ப்பித்தல் வேண்டும்.

## 10.பாதுகாப்பு இல்லத்தினால் பின்பற்ற வேண்டிய நியமங்கள்

கீழ்வரும் அடிப்படை நியமங்கள் பாதுகாப்பு இல்ல நிர்வாகத்தினால் பின்பற்றபடவேண்டும். இவ் நியமங்கள் காலத்திற்கு காலம் நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள் மற்றும் தேசிய கொள்கைகளை பின்பற்றி செயற்படல் வேண்டும்.

### 10.1 கட்டடங்களும் சுற்றுப்புறச் சூழல்களும்

10.1.1 படுக்கையறையில் ஒவ்வொரு பிள்ளைக்கும் 36 சதுர அடி படுக்கை இடவசதி கிடைக்க வேண்டும்.

10.1.2 சேவைநாடிகள் குளியல், போசனம் மற்றும் ஓய்வு என்பவற்றிக்கு போதுமானதாக இல்லம் காணப்படல் வேண்டும்.

10.1.3 தேவையான வெளிச்சத்தையும் காற்றோட்ட வசதிகளையும் பெறத்தக்கதாக கட்டடத்தின் பரப்பளவில் 1/7 பங்கு கதவுகளையும் யன்னல்களையும் உடையதாக இருத்தல் வேண்டும்.

10.1.4 ஊழியருக்கான ஓய்வெடுக்கும் தங்குமிட வசதி வேறாக இருத்தல் வேண்டும்.

10.1.5 கட்டடம் துப்பரவாகவும், அழகாகவும் பேணப்படல் வேண்டும். இல்லத்தின் சுற்றுச் சூழல் தூய்மையாகவும், பூந்தோட்டங்கள் அமைத்து அழகாகவும் பேணப்படல் வேண்டும். இல்லத்தில் பயனுள்ள மரங்கள் வீட்டுதோட்டங்கள் என்பவற்றினை ஏற்படுத்தி இருத்தல் வேண்டும்.

10.1.6 இல்லத்தின் தேவையினை பூர்த்தி செய்யக் கூடியவகையில் நீரானது குழாய்க் கிணறு மூலமாகவோ அல்லது கிணற்று நீர் கிடைக்க கூடியதாகவோ இருத்தல் வேண்டும்.

10.1.7 சிறுமிகளுக்கு பாதுகாப்பான போதுமான குளியல் வசதிகள் ஏற்படுத்தி இருத்தல் வேண்டும்.

10.1.8 சிறுமிகளுக்கு நியமத்தராதரத்துக்கு ஏற்ப மலசலகூட வசதிகள் ஏற்படுத்தி இருத்தல் வேண்டும்.

10.1.9 சிறுமிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10.2 உளவளத்துணை வழங்கப்படக் கூடிய வகையில் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10.2.1 சுகாதாரமான சமையல் அறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.



சுஜீதா சிவநாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

## 11. உணவு தொடர்பான விடயங்கள்

11.1 வயதிற்கேற்ப போசாக்கான உணவுகள் வழங்கப்படல் வேண்டும்

11.2 சுகாதார வைத்திய அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட உணவுப் பட்டியல் (Diet Rolls) தயாரித்து காட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

## 12. உடை தொடர்பான விடயங்கள்

12.1.1 ஒவ்வொரு சேவை நாடிக்கும் சுகாதாரமான போர்வை, துவாய் மற்றும் படுக்கை விரிப்பு மற்றும் தலையணைகள் வழங்கப்படல் வேண்டும்.

12.1.2 ஒவ்வொரு சேவை நாடிக்கும் போதியளவான உடை வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

## 13. பணி நியமங்கள்

மிகச் சிறந்த வகையில் பாதுகாப்பு பராமரிப்பு சேவைகளை வழங்க பின்வரும் படிமுறைகளை பின்பற்றல் வேண்டும்.

**13.1 இல்ல இட ஒதுக்கீட்டுக் குழு (Placement Committee) ஆணையாளர் தலைமையில் 2 மாதத்திற்கு ஒருதடவை கூட்டுவதற்கு சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர் வசதிப்படுத்தல் வேண்டும். இடஒதுக்கீட்டுக்குழுவில் அங்கத்துவம் வகிப்போர்.**

- சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர்
- நன்னடத்தை உத்தியோகத்தர்/பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்
- உளவளத்துணை உத்தியோகத்தர்
- பெண்கள் மற்றும் சிறுவர் பொலிஸ் உத்தியோகத்தர்
- குடும்பநல உத்தியோகத்தர்
- சேவைநாடியின் பெற்றோர்/உறவினர்
- கிராமசேவையாளர்

இவ் இடஒதுக்கீட்டுக்குழுவில் இல்லத்திற்கு அனுமதிக்கப்பட்ட சிறுமி நலன்கள், ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் இல்லத்திற்கு அனுமதிக்கப்படும், சேவைநாடி தொடர்பான பகுப்பாய்வு, இல்லத்திலிருந்து சுயமாக விலக விண்ணப்பிப்போர் தொடர்பான ஆராய்வு போன்றன மேற்கொள்ளப்படும். இடஒதுக்கீட்டுகுழுவின் கலந்துரையாடல் அறிக்கைகள் துறைசார்ந்த கடமைப் பொறுப்புடையவர்களுக்கு காலக்கிரமத்துடன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.



ஜீவா சிவநாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

**13.2. இல்லத்தில் கீழ்வரும் பதிவேடுகள் பேணப்படல் வேண்டும்.**

13.2.1 ஒவ்வொரு சேவை நாடிகளிற்குமான சுயவிபரக் கோவைகள் பேணப்பட வேண்டும் இக் கோவையில் பின்வரும் ஆவணங்கள் கோவையிடப்பட்டிருத்தல் வேண்டும்.

- வழக்கு அறிக்கை
- மருத்துவ அறிக்கை
- உளவளத்துணை அறிக்கை
- கல்வி முன்னேற்ற அறிக்கை
- சமூக பாதுகாப்பு சேவை மதிப்பீடும் சிகிச்சை செயல் திட்டத்திற்கான படிவம்
- வெளியேறும்போது நிரப்பப்பட வேண்டிய படிவம்
- பொலிஸ் அறிக்கை
- நீதிமன்றக் கட்டளை
- விடயமாநாட்டு அறிக்கை
- சமூகஅறிக்கை
- குடும்பநல சுகாதார உத்தியோகத்தரின் அறிக்கை
- தொடர் கண்காணிப்பு அறிக்கைகள்.
- பராமரிப்புத் திட்டம்(Care plan)
- சிறுமிகளால் ஒப்படைக்கப்பட்ட / சிறுமிகளிடம் உள்ள உடமைகள்/பெறுமதியான பொருட்கள் பட்டியல்

13.2.2 அனுமதிப் பதிவேடு

13.2.3 நானவித செலவுப் பதிவேடு

13.2.4 கணக்கறிக்கை

13.2.5 குறிப்புப் புத்தகம் (அரச உத்தியோகத்தர்களிற்காக)

13.2.6 இருப்புப் பதிவேடு

13.2.7 உணவுப் பதிவேடு

13.2.8 நாளாந்த சம்பளத் திரட்டுப் பதிவேடு

## 14. ஊழியர் பற்றிய நியமங்கள்

**14.1 சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

1. இல்லத்தினை கிரமமாக மேற்பார்வை செய்தல்
2. இடவமைவுக் குழு கூட்டத்திற்கு வசதிப்படுத்தல்
3. இல்லச் சிறுமிகளின் புனர்வாழ்வளித்தல் செயன்முறைக்கு ஆலோசனை வழங்குதல்
4. இல்லச் செயற்பாடுகளில் திணைக்களத்தினை ஒருங்கிணைத்தல்
5. இல்லத்தின் தேவைகளை திணைக்களத்திற்குப் பரிந்துரைத்தல்



சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

6. சிறுமிகளின் சேம நலன் பாதுகாக்கப்படுதலை உறுதிப்படுத்தலும், திணைக்களத்திற்குப் பரிந்துரைத்தலும்

**14.2 பாதுகாப்பு இல்லப் பொறுப்பதிகாரியின் பொறுப்புக்கள்**

1. நம்பகத்தன்மை மற்றும் இரகசியம் பேணுதல் வேண்டும்.
2. இல்லத்தின் அனைத்து நிர்வாகம் மற்றும் நிதிச் செயற்பாடுகள் தொடர்பாக திணைக்கள ஆணையாளர் மற்றும் மாவட்ட சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தருக்கு பொறுப்பு கூறும் வகையில் கடமையாற்றுதல்.
3. ஆணையாளர் அல்லது சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தரின் முன் அனுமதி பெற்ற பின்னரே இல்ல உத்தியோகத்தர் தவிர்ந்த ஏனைய வெளிநபர்களை இல்ல வளாகத்திற்குள் நுழைவதற்கு அனுமதித்தல்.
4. அனைத்து பணியாளர்களின் தினவரவுப் பதிவேடுகளை பரிசீலித்து ஒப்பமிட்டு மாதாந்த தினவரவு அறிக்கையினை மாவட்ட சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தருக்கூடாக திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல்.
5. இல்லத்தில் கடமையாற்றும் திணைக்கள சேவை அலுவலர்களுக்கான சுழற்சி முறைக் கடமை அட்டவணை (Duty Roster) தயாரித்தல்.
6. இல்லத்தில் கடமையாற்றும் அனைத்து அலுவலர்களினதும் கடமைகளை கண்காணித்தலும், உறுதி செய்தலும்.
7. இல்ல அனுமதிகள், மீளிணைப்புக்கள் யாவும் நீதிமன்றக் கட்டளை/ஆணையாளரின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்தல்.
8. இல்லத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள பிள்ளைகளை வைத்தியசாலை மற்றும் நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்லும் போது பாதுகாப்பாக கொண்டு செல்லல்.
9. சேவை நாடிகள் மற்றும் உத்தியோகத்தர்களின் தேவைகளை மாவட்ட சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தருக்கூடாக திணைக்களத்திற்கு அறிவித்து அவற்றைப் பெற்றுக் கொடுத்தல்.
10. இல்ல விடுதியும்,வளாகமும் சுத்தமாகவும், அழகாகவும் இருப்பதை உறுதிசெய்தல்.

கீழ்வருவோர் பராமரிப்பாளர்களாக இல்லத்தில் காணப்படுவார்கள்

**14.3 பிரதம பராமரிப்பாளர்**

இரண்டு அமர்வுகளிற்கு மேற்படாமல் கணிதம் மற்றும் மொழியில் திறமைச் சித்தியுடன் க.பொ.த (சாதாரண) தரத்தில் 06 பாடங்களிற்கு குறையாமல் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
அத்துடன் ஒருதடவையில் 05 பாடங்கள் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

கீழ்வரும் கடமைகளைஆற்றுதல் வேண்டும்.

1. சேவை நாடிகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு.
2. ஒழுங்கான ஆவணப்படுத்தலும், பேணுதலும்.
3. சம்பவமாநாட்டில் எடுக்கப்பட்ட, பரிந்துரைக்கப்பட்ட முடிவுகளை நடைமுறைப்படுத்தல்.



சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

4. நம்பகத்தன்மையும், இரகசியம் பேணும் தன்மையும்.
5. மனிதநேயப் பண்புகள் மற்றும் முழுமையான அர்ப்பணிப்புடன் கடமையாற்றுதல்.
6. உரிய நேரத்திற்கு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
7. உரிய நேரத்தில் அறிக்கைப்படுத்தல்.
8. சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தரினால் அவ்வப்போது பணிக்கப்படும் கடமைகளை ஆற்றுதல்.
9. பாதுகாப்பு இல்ல பொறுப்பதிகாரியினால் அவ்வப்போது பணிக்கப்படும் கடமைகளை ஆற்றுதல்.

**பொறுப்புக்கள்**

1. சேவைநாடியின் பாதுகாப்பை உறுதிசெய்தல்.
2. சேவைநாடிக்கு திருப்திகரமான சேவை வழங்கல்.
3. திறன்களை அடையாளங்காணலும், விருத்திசெய்தலும்.
4. பாதுகாப்பு இல்லத்தை அழகாகவும், சுத்தமாகவும் வைத்திருத்தல்.
5. பொருத்தமான பரிந்துரைகளையும், சிபாரிசுகளையும் உரியகாலத்தில் மேற்கொள்ளுதல்.
6. சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பணிமனையினை சார்ந்த உத்தியோகத்தர்களின் வருகையை உறுதிப்படுத்தல்.
7. சமய கலாச்சார விழுமியங்களை பின்பற்றத் துணை புரிதல்.

14.4 உதவிப் பராமரிப்பாளர்

இரண்டு அமர்வுகளிற்கு மேற்படாமல் கணிதம் மற்றும் மொழியில் திறமைச் சித்தியுடன் க.பொ.த (சாதாரண) தரத்தில் 06 பாடங்களிற்கு குறையாமல் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஒருதடவையில் 05 பாடங்கள் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

கீழ்வரும் கடமைகளை ஆற்றுதல் வேண்டும்

1. பாராமரிப்பாளரின் கடமைகளிற்கு உறுதுணையாக கடமையாற்றுதல்
2. பராமரிப்பாளர் கடமைக்கு சமூகமளிக்காத தருணத்தில் அவரின் கடமைகளை ஆற்றுதல்
3. சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தரினால் அவ்வப்போது பணிக்கப்படும் கடமைகளை ஆற்றுதல்.
4. பாதுகாப்பு இல்ல பொறுப்பதிகாரியினால் அவ்வப்போது பணிக்கப்படும் கடமைகளை ஆற்றுதல்.

சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

14.5 ஆசிரியர்

இரண்டு அமர்வுகளிற்கு மேற்படாமல் கணிதம் மற்றும் மொழியில் திறமைச்சித்தியுடன் க.பொ.த (சாதாரண) தரத்தில் 06 பாடங்களிற்கு குறையாமல் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் ஒரு தடவையில் 05 பாடங்கள் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

கடமைகள்

1. இல்லத்தில் உள்ள சிறுவர்களிற்கு கல்வியினை வழங்குதல்
2. சிறுமிகள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளபோது அவர்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பினை உறுதிப்படுத்தல்.
3. அங்கீகரிக்கப்பட்ட பாடவிதானத்தினை தற்போதைய கற்றல் முறைகளிற்கு ஊடாக இல்லத்தில் உள்ள சிறுவர்களிற்கு வழங்குதல்.
4. ஒவ்வொரு பிள்ளைகளிற்கும் தனிப்பட்ட கவனிப்புகளை வழங்குதல்.
5. பிள்ளைகளின் அடைவு மட்டங்களை பரீட்சிப்பதற்கு ஏதுவாக பரீட்சைகள் நடாத்தி புள்ளிகள் வழங்கப்படல் வேண்டும்.
6. பிள்ளைகளின் வருகை தொடர்பான பதிவேடுகளை மேற்கொள்ளல்.
7. அவ்வப்போது சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தரினால் வழங்கப்படும் கடமைகளை ஆற்றுதல்.

14.6 சமையலாளர்

தரம் 10 வரை சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஆகக் குறைந்த 03 வருட அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

1. சுகாதாரமான, சுவையான மற்றும் போசாக்கான உணவுகளை சமைத்து வழங்குதல்
2. சமையலுக்காக பயன்படுத்திய பாத்திரங்கள், உபகரணங்களை தூய்மையாக கழுவி அந்தந்த இடத்தில் அடுக்கி வைத்தல்
3. சமையலறையினை ஈக்கள் மற்றும் தூசுகள் இல்லாதவாறு சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணுதல்
4. சமையலுக்காக வழங்கப்பட்ட உணவுப் பொருட்களை பாதுகாப்பாக பேணுதல்
5. சமையலுக்காக வழங்கப்பட்ட பொருட்களை இழப்புகள் சேதங்கள் இன்றி சரியான முறையில் பயன்படுத்துவதை உறுதிப்படுத்தல்
6. அவ்வப்போது பிரதம பராமரிப்பாளரினால் வழங்கப்படும் பணிப்புரைகளிற்கு அமைய செயற்படுதல்.

14.7 சாரதி

1. குறைந்தபட்சம் எட்டாம் தரத்தில் அல்லது ஒன்பதாம் தரத்தில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.



சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

2. தனியார் அல்லது வாடகை கார்களையும் 2.4 அந்தருக்கு குறைவான நிறையுள்ள ஸ்ரேசன் வெகன் வண்டிகளை செலுத்துவதற்கு தகுதியுடையவர் என்பதற்கான மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றைகொண்டிருத்தல் வேண்டும்.

3 மோட்டார் வாகன சாரதியாக மூன்றாண்டு அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.

4 ஆகக்குறைந்தது 5 அடி 2 ½அங்குலம் உயரமுடையவராக இருக்க வேண்டும்.

5. பெருந்தெருக்கள் சட்டக்கோவை பற்றி நல்ல அறிவு கொண்டவராயிருக்க வேண்டும்.

6. இரவிலும் பகலிலும் கடமையாற்றக் கூடியதாக நல்ல உடல் ஆரோக்கியமும் நல்ல கண் பார்வையுமுடையவராக இருக்க வேண்டும்.

### 14.8 காவலாளி

1. இல்ல வளாகம் மற்றும் இல்லத்தில் உள்ள சொத்துக்களுக்கு பொறுப்பாக இருப்பதுடன் சேதங்கள் ஏற்படுவதை தவிர்த்தல் வேண்டும்.

2. இல்லத்தின் சுற்றுப்புறச் சூழலினை சுற்றிப்பார்த்தல்

3. இல்லத்தில் தங்கியுள்ள சிறுவர்கள் இல்ல வளாகத்தில் சந்தேகத்திற்கு இடமாக நடமாடினால் மற்றும் இல்ல வளாகத்தில் ஏதேனும் விபரிதம் நடைபெறக் கூடிய சாத்தியப்பாடுகள் காணப்படுமானால் அது தொடர்பாக பொறுப்பதிகாரியின் கவனத்திற்கு கொண்டுவருதல் வேண்டும்.

4. சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் இல்ல பொறுப்பதிகாரியினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றிசெயற்படுதல் வேண்டும்.

## 15. பொதுவான விடயங்கள்

15.1 விருந்தினர் சந்திப்பிற்காக இல்லத்திற்கு வெளியே நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளரினால் அங்கீகரிக்கப்படும் பிரத்தியேகமாக இடம் ஏற்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

15.2 பாதுகாப்பு இல்லத்தின் தொழிற்பாடுகள் தொடர்பாக நன்னடத்தை திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட குழுவினால் (Laison Committee) மீளாய்வுகள் செய்யப்பட வேண்டும். இக் குழுவில் கீழ்வரும் அங்கத்தவர்கள் அங்கம் வகிப்பர்.

- ஆணையாளர், சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களம்
- அரசாங்க அதிபர்
- பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
- அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி
- பெண்கள் சிறுவர்கள் பொலிஸ் உத்தியோகத்தர்



சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

இக் குழுவானது இல்லம் ஆரம்பித்து 06 மாத கால முடிவிலும் ஒரு வருட முடிவிலும் மீளாய்வினை மேற்கொள்ள வேண்டும். அதன் பின்னர் தேவையேற்படின் மீளாய்வினை மேற்கொள்ள வேண்டும்.

15.3 பாதுகாப்பு இல்லத்திற்கு மாதம் தோறும் கள விஜயத்தினை மேற்கொள்ள கீழ்வரும் உத்தியோகத்தர்கள் உரித்துடையவர்கள்.

- நன்னடத்தை உத்தியோகத்தர்
- குடும்பநல உத்தியோகத்தர்
- பொதுச்சுகாதார பரிசோதகர்
- பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்
- உளவளத்துணை உத்தியோகத்தர்

15.4 இல்லத்தில் உள்ள சேவை நாடிகள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பான விடயங்களிற்கு முறைப்பாட்டு பெட்டி ஒன்றினை இல்லத்தில் பேணுதல் வேண்டும். முறைப்பாடுகள் மற்றும் பிரச்சனைகளிற்கான தீர்வுகளினை சிரேஸ்ட நன்னடத்தை உத்தியோகத்தர் காலக்கிரமத்தில் வழங்க வேண்டும்.

15.5 இல்லத்திலிருந்து சுயமாக விலக விரும்புவோர் இல்ல மேற்பார்வையாளருக்கு தமது விண்ணப்பங்களை செய்தல் வேண்டும். இவ் விண்ணப்பங்கள் இட ஒதுக்கீட்டு குழு அல்லது பெண்கள் நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதன் ஊடாக நீதிமன்றக் கட்டளைக்கு அமைய விலத்தப்படலாம். ஏனையோருக்கு இடஒதுக்கீட்டுகுழுவின் தீர்மானத்திற்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

15.6 இல்லத்தில் உள்ள சிறுமிகள் தமது பெறுமதி மிக்க அசையும் சொத்துகள் மற்றும் ஆவணங்களை பாதுகாப்பாக வைத்திருக்கும் நோக்கில் இல்ல பொறுப்பதிகாரியினால் ஆவணப் பெட்டகம் ஒன்று பேணப்படும். சேவைநாடி இல்லத்திற்கு அனுமதிக்கப்படும் போது இல்லத்தினால் வழங்கப்படும் படிவத்தில் தமது ஆவணங்கள் மற்றும் அசையும் சொத்துக்கள் என்பவற்றினை நிரல்படுத்தி கையளித்தல் வேண்டும். இவ் ஆவணப் பெட்டக்கத்தில் பேணப்படும் ஆவணங்கள் சொத்துகள் சேவைநாடி இல்லத்தைவிட்டு வெளியேறும் போது கையளிக்கப்படும்.

15.7 இல்லத்தில் உள்ள சிறுமிகளின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தினை உறுதிப்படுத்தும் வகையில், வாரந்தோறும் இல்லம் எப்பிரதேசத்தில் அமைந்துள்ளதோ அதற்கு அண்மையில் உள்ள அரச மருத்துவமனை மருத்துவ உத்தியோகத்தரினால் மருத்துவ ஆலோசனைகளை வழங்க ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு அந்தந்த மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு உடையதாகும்.



சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்

15.8 தாய் சேய் இருவரும் இணைக்கப்படும் போது இருவரினதும் போசாக்கு, தாய் சேய் நலச் சிகிச்சை, உளநலம் மற்றும் அவசரகால மருத்துவச் சேவை என்பவற்றினை பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலக தாய் சேய் நலப்பிரிவு உறுதிப்படுத்தல் வேண்டும்.

15.9 சிறுமிகளுக்கான மருத்துவ சேவையினை அருகிலுள்ள மாவட்ட வைத்தியசாலையில் சிகச்சையினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

15.10 சிறுமிகளுக்கான உளநல சிகிச்சை அருகிலுள்ள மாவட்ட வைத்தியசாலை உளநலப்பிரிவின் சிகிச்சையினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

15.11 மாகாண ஆணையாளரின் முன் அனுமதி பெறப்படாமல் வெளி நபர்கள் இல்ல வளாகத்தினுள் அனுமதிக்கக் கூடாது.

15.12 வெளி நபர்கள் எவரும் ஒளிப்படம் எடுப்பதற்கு அனுமதிக்க முடியாது.

நா.வேதநாயகன்
ஆளுநர்
வட மாகாணம்

சுஜீவா சிவதாஸ்
ஆணையாளர்
நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு
சேவைகள் திணைக்களம்
வடமாகாணம்